

# சிற்றிலக்கியச் சீ

வலையுரைத்தொடர் தொகுப்பு

(செப்டம்பர் 2021)

(முனைவர். க. ரேவதி)

தொகுப்பு

## இன்பா

10/9/23, 3:08 PM 20231009_150744.jpg

சிற்றிலக்கியச் சீர்

வலையுரைத் தொடர் தொகுப்பு

தொகுப்பு : இன்பா ©

முதல் பதிப்பு: செப்டம்பர் 2021

வெளியீடு: கவிமாலை, சிங்கப்பூர்

**Cirrilakkiyac cīr**

Youtube Speeches

Compiled by **INBHA.A** ©

First Edition: September 2021

Price : ₹ 350/- , சிங்கப்பூர் : S$ 25

ISBN: 9789811821226

Published by Kavimaalai, Singapore

https://mail.google.com/mail/u/0/#inbox?projector=1 1/1

# பொருளடக்கம்


1. சிற்றிலக்கியம் ஓர் அறிமுகம் - எழுத்தாளர் நாஞ்சில் நாடன் 11
2. மணிமாலை இலக்கியங்கள் - மரபின்மைந்தன் முத்தையா 37
3. உழத்திப்பாட்டு - முனைவர் க.ரேவதி 44
4. தமிழ் விடு தூது - கவிஞர் மகுடேசுவரன் 56
5. ஆற்றுப்படை - கவிஞர் தி. கோவிந்தராசு 73
6. நந்திக்கலம்பகம் - சிவன்குமரன் 89
7. குறம் என்னும் குறவஞ்சி - முனைவர் இரத்தின வேங்கடேசன் 107
8. பிள்ளைத்தமிழ் - முனைவர் சரோஜினி செல்லக்கிருஷ்ணன் 120
9. தமிழ்ச் சிற்றிலக்கிய மரபில் தசாங்க இலக்கியம் - முனைவர் பா.ஜெய்கணேஷ் 127
10. செவியறிவுறூஉ - தர்மாம்பாள் சீனிவாசன் 144
11. தூது இலக்கியம் - எழுத்தாளர் பெருமாள்முருகன் 154
12. உலா என்னும் சிற்றிலக்கியம் : புரிதலுக்கான ஒரு முயற்சி - சுந்தர் காளி 175
13. மடல் - முனைவர் ந.இளங்கோ 183
14. சதகம் - வழக்கறிஞர் இராமலிங்கம் 196
15. பாதாதிகேசம் - முனைவர் குறிஞ்சிவேந்தன் 207
16. கோவை - முனைவர் விஜயசுந்தரி 221
17. பள்ளு - அருள்பிரகாசம் 236
18. அந்தாதி - பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் 250
19. பரணி - முனைவர் ப.சரவணன் 259
20. சிற்றிலக்கியங்களின் காலப்பின்னணி - பேராசிரியர் அ.ராமசாமி 283

# உழத்திப்பாட்டு

- முனைவர் க.ரேவதி



## முன்னுரை

உலகில் புகழ்பெற்ற உயர்தனிச் செம்மொழியாய் இனிமையும் தொன்மையும் இலக்கிய வளமும் இலக்கண வளமும் பெற்றுக் கால வெள்ளத்தைக் கடந்து நிற்பது நம் அன்னைத் தமிழ் மொழி. எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் என்ற இலக்கணங்களோடு மக்களின் வாழ்க்கைக்கும் பொருளிலக்கணம் கண்ட பெருமையது. இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவிலும் முதன்மை பெற்றது. பல்வேறு மொழிகளை ஈன்றெடுத்தாலும் இளமை குன்றாமல் எழிலொடு விளக்கம் பெற்றது. அத்தகைய அருந்தமிழ்த் தாய்க்கு அணி சேர்ப்பன சங்க இலக்கியங்கள் முதலாகத் தோற்றம் பெற்ற பல்வேறு இலக்கியங்களாகும். அவற்றுள் தனிச் சிறப்புடையன சிற்றிலக்கியங்களாகும்.

## உழத்திப்பாட்டுத் தோற்றம்

தொல்காப்பியர் வகுத்த அதிகாரங்கள், இயல்கள், நூற்பாக்கள், துறைகள் எனப் பலவும் பிற்காலப் புத்திலக்கிய வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளன. முன்னையோர் கூறிய நெறியிலிருந்து வளர்ச்சி பெறும் புதுமையினைப் புனைதலைத் தொல்காப்பியார்,

"விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"


எனப் போற்றி உரைப்பதைக் காணலாம். தொல்காப்பியத்தில் சுட்டப்படும் "ஏரோர் களவழி" வெற்றி வாகைப் படலத்தில் வரும் துறைகளுள் ஒன்றாகிய மருத நிலத்திற்குரியதாய் வயலும் வயல் சார்ந்த முதல், கரு, உரிப் பொருள்களைத் தொல்காப்பிய அகத்திணை இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

உழவரின் செயல், மருத நிலத் தொழிலின் செயல்கள், மருத நில விளைபொருள்கள், உழவர் இல்லம், அவர்தம் வாழ்வியல் நெறிமுறைகள், விருந்து ஓம்பல் நிலை என உழவர்களின் வாழ்வு குறித்து விரிவாகப் பேசுகிறது பெரும்பாணாற்றுப்படை.

"[illegible] வெண்ணெல் [illegible]
[illegible] பெறுகுவிர்"

என்பதனால் "உழவர் தம் முயற்சியாலான வெண்மையான சோற்றைக் கோழிப்பெடைப் பொரியலோடு பெறுவீர்" எனப் பாணரை ஆற்றுப்படுத்துவதை உணர முடிகின்றது. ஐந்திணை அடிப்படையில் இசைப் பாடல்கள் தோன்றின என்பதைச் சிலப்பதிகாரம் வாயிலாக அறியலாம். குன்றக்குரவை (குறிஞ்சி), வேட்டுவ வரி (பாலை), ஆய்ச்சியர் குரவை (முல்லை), கானல் வரி (நெய்தல்) ஆகியவற்றை இங்கு ஒப்பு நோக்கலாம். ஆறும், ஏரும், உழவரும் பாராட்டப்பட்டுள்ளதைக் கானல் வரியில் காணலாம். அங்கு ஆற்று வரி என்று சுட்டப்படுகின்றது.

காப்பியங்கள், காவியங்கள், இதிகாசங்கள், புராணநூல்கள் என அனைத்து வகை இலக்கியங்களிலும் மருத நில வளமும் வாழ்வும் சுட்டப்படுவதைக் காணலாம். இவற்றைத் தொடர்ந்து மதுரையில் கி.பி 1350 முதல் கி.பி 1750 வரை குமாரகம்பண்ணர் நாயக்கர் முதலாக ஆட்சி புரிந்த நாயக்க மன்னர்கள் காலத்தில் அந்தாதி, உலா, பரணி, கோவை, கலம்பகம், தூது, குறவஞ்சி என அகம், புறம், பக்தி சார்ந்த பல்வேறு சிற்றிலக்கிய வகைகளோடு தனித்துவம் மிக்கதாய், தரணி வாழ் உயிர்களுக்குப் பசி தணிவிக்கும் உழவர்களின் தொழிலையும் வாழ்வையும் பாடும் உழத்தியர் பாட்டும் புதிய இலக்கிய வகைமையாய் மலர்ந்தது. சிற்றிலக்கிய வேந்தர் என்று போற்றப்படும் குமரகுருபரர் 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் முதன் முதலில் தோன்றிய இலக்கிய வகை 'பள்ளு' என்று போற்றி உரைக்கிறார். உழவர் பாட்டு "ஏர் மங்கலம்" என்று அழைக்கப்பட்டது. பின்னர் உழவர் பாட்டு என்றும் உழத்தியர் பாட்டு என்றும் அழைக்கப்பட்டு உழவுத் தொழிலைப் புரிவோர் பள்ளர் என்று வந்துள்ளது.


தமிழர் மாண்பு
(தேசிய ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரைகள்)
புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்

# நூற்குறிப்பு

- நூல் : தமிழர் மாண்பு
- மொழி : தமிழ்
- வகை : கட்டுரை
- நூல் தொகுப்பு : பாவலர் ஆறு செல்வன்
  9894755985
- பதிப்பாசிரியர் : முனைவர் அ. விஜயராணி
- துணைப்பதிப்பாசிரியர்கள் : பேராசிரியர் க. கிருஷ்ணம்மாள்
  முனைவர் அண்ணா. ஜெகன்
- முதல் பதிப்பு : 25.09. 2022
- வெளியீடு : புதுச்சேரிப் படைப்பாளர் இயக்கம்
- உரிமை : வெளியீட்டாளருக்கு
- நூலின்அளவு : 1/8 demi
- பக்கம் : 318
- தாள் : மேப்லித்தோ N.S. - 70 G.S.M.
- மேல் அட்டை : பல்வண்ண அட்டை - 300 G.S.M.
- மேல்அட்டை வடிவமைப்பு : ஜெயக்குமார்
- நூல் வடிவமைப்பு : க.சரவணன்
  அச்சாக்கம் : யோகி பதிப்பகம்.
  65.,4வது குறுக்குத்தெரு, சக்திநகர்
  புதுச்சேரி -13 பேசி : 99947 25888
- ISBN No. : 978-81-954810-3-3
- விலை : உருபாய் 500/-

43. தமிழ் இலக்கியங்கள் - தமிழ்ச் சமூகமும் நீரும்
முனைவர். ந.மோகன்ராஜ்
44. செந்தமிழ் செல்வன் சுந்தரனாரின் தமிழ் இலக்கிய
கல்வெட்டு ஆய்வு முடிவுகள் - பேராசிரியர்
முனைவர் சு. மோதிலால் நேரு
45. சிறுபாணாற்றுப்படையில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் கா. ராஜகுமாரி
46. சங்கத் தமிழர் விளையாட்டும் பொழுதுபோக்கும்
முனைவர் க.ரேவதி ப. 275
47. செம்மொழி இலக்கியங்களில் காணலாகும்
அறிவியல் சிந்தனைகள் - முனைவர். க.லெட்சுமி
48. சங்க இலக்கியத்தில் ஊழ்
முனைவர் வா. வினோத்
49. திருக்குறளில் தமிழர்தம் விழுமியங்கள்
முனைவர் ஆ.விஜயராணி
50. அறிவியலில் தமிழனின் தொன்மை
பாவலர் வ. விஜயலட்சுமி
51. ஐஞ்சிறு காப்பியங்களில் அணிநலம்
முனைவர் கோ. வெற்றிச்செல்வி
52. திருக்குறள் உணர்த்தும் சிறந்த பண்புகளே,
மனிதனை பெருமைப்பட வாழவைப்பவை
முனைவர் அண்ணா. ஜெகன்
3. விருந்தோம்பலில் தமிழனின் மாண்பு
முனைவர் வெ. ஜெயந்தி வேல்முருகன்

1:33 AM 20231003_104837.jpg



இதன்வழிக் கள்ளை நாடி வந்த பாணனைக் கண்டதும் உள்ளத்தில் தோன்றிய ஆர்வம் முகத்திலும் தோன்றுமாறு அருகில் சென்று உதவும் பண்பை உடையவன் நல்லியக்கோடன் என்பது தெளிவாகின்றது. நல்லியக்கோடனின் இப்பண்பைப் பொருநராற்றுப்படையில் கரிகாலனிடமும் காணமுடிகின்றது.

முடிவுரை

சங்க கால மன்னர்கள் பலர் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினாலும் அவர்களுள் நல்லியக்கோடனின் விருந்தோம்பல் தனித்துவம் பெறுகின்றது. விருந்தோம்பல் ஆண், பெண் இருவருக்கும் உரிய கடமை. காலத்திற்குக் காலம் இடத்திற்கு இடம் உணவு வகை வேறுபடுகிறது. பண்டைய மக்கள் கள்ளினை விருந்தினருக்கு வழங்கிய பண்பு அறியமுடிகிறது. விருந்தில் ஆடைக்கு முன்னுரிமை வழங்கிய தன்மையும் உண்டு. தமிழர்கள் விருந்தோம்பல் பண்புகளில் சிறந்தவர்கள் என்பதற்குச் சிறுபாணாற்றுப்படை சான்றாக அமைந்துள்ளது எனலாம்.





## சங்கத் தமிழர் விளையாட்டும் பொழுதுபோக்கும்



முனைவர் க. ரேவதி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
...சேரி.

உலகில் ஒவ்வோர் இன மக்களும் தாங்கள் வாழும் ...வியல் மற்றும் தங்கள் வாழ்வியல் நிலைகளுக்கேற்ப பல விளையாட்டுகளிலும், பொழுதுபோக்குகளிலும் ஈடுபடுவர். ...வை அவர்தம் பண்பாட்டு நாகரிக நிலைகளை அறிவிப்பனவாக ...மைகின்றன. மனிதச் சமுதாயம் எவ்வளவு தொன்மையானதோ ...வ்வளவு தொன்மையானது அச்சமுதாயம் ஆடிய விளையாட்டும் ஆகும். மனிதன் இனக்குழுவாக ஒன்று சேர்ந்து ...ழத்தலைப்பட்ட போதே விளையாட்டு கால் கொண்டிருக்க ...ண்டும். அது முதல் விளையாட்டானது சமுதாயத்தை ...க்கியும் ஊக்கியும் ஒழுங்குபடுத்தியும் வருகின்றது எனலாம்.

### ...ல்காப்பியமும் சங்க இலக்கியமும் :

தொல்காப்பியர் உவகையாகிய மெய்ப்பாடு ...ன்றுவதற்குரிய நிலைக்களன்களாகப் பெருமை, புதுமை, ...டை, விளையாட்டு ஆகியவற்றை சுட்டுகிறார். இதனால் ...மிழர் வாழ்வில் விளையாட்டுகள் இடம் பெற்ற தொன்மை ...லையினை அறியலாம். சங்கத் தமிழர் உழவு முதலான ...லைகளைச் செய்தமையால் நிறைய ஓய்வும் நில ...அடிப்படையில் இயற்கையோடு பொருந்தி இனக்குழுவாக ...ழ்ந்தமையால் நட்புறவும் கொண்டு வாழ்ந்தனர். இதனால் ...து ஓய்வு நேரங்களில் விளையாட்டுகளிலும் பொழுது...க்குகளிலும் ஈடுபட்டனர். இதனைச் சங்க இலக்கிய...டல்கள் தெளிவுறுத்துவதைக் காணலாம்.

### ...மாடுதல் :

கலித்தொகையில் அமைந்த 136-ஆவது பா... ...மாடுதல் குறித்த செய்திகளை விரிவாக எடுத்துக் கூறு... ...வ்விளையாட்டினை ஆடுகின்ற இடம் "கழகம்" எனப்ப... ...ற்குரிய கருவி "கவறு" எனப்படும் இன்றைய நாளில்



https://mail.google.com/mail/u/0/#inbox?projector=1